5. வாழ்வு வழங்கும் வள்ளலே இறைவா!

உமது அன்பில், இரக்கத்தில் மகிழும் நாங்கள் இவ்வுலகில் கைவிடப்பட்ட ஏழைகள், ஆதரவற்றோர், கைம்பெண்கள், தீராத நோய்களினால் அவதியுறுபவர்கள் இவர்கள் நலனில் அக்கறைக் கொண்டு அவர்கள் வாழ்வில் ஒளிக்கீற்றுக்களாக இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## நன்றி மன்றாட்டு

1. வாழ்வின் இறைவா! சிறார் இயக்கம் வழியாக, எங்களை நல்ல கிறிஸ்தவக் குழந்தைகளாக உருவாக்கி, பிறருக்கு முன்னுதாரணமாக வாழ வளப்படுத்தியதற்காக இறைவா உமக்கு நன்றி.

2. ஒளியின் இறைவா! எங்களின் உருவாக்கத்தில் துணை நின்று, நல்வழிகாட்ட நல்ல ஆயரை, அருள்பணியாளரை, பெற்றோரை, ஆசிரியர்களை, வழிகாட்டிகளை, நண்பர்களைக் கொடுத்ததற்காக, இறைவா உமக்கு நன்றி.

3. வளமையின் இறைவா! நாங்கள் இறைநம்பிக்கையால் உலகின் எதிர்கால சாட்சிகளாக மாறுவதற்கு, திறமைகளை வளர்க்க கொடுக்கும் வாய்ப்புக்காக இறைவா உமக்கு நன்றி.

**தயாரிப்பு:** சிறார் பணிக்குழு,
கோட்டாறு மறைமாவட்டம்.

*Assisi Offset Press, Ngl. Ph.: 04652-231085, 7667729591*

# பாலர் சபை நாள் 14.02.2021

## வழிபாட்டுக் குறிப்புகள்

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பிற்கினியவர்களே!

ஒரு சொல்லில் உள்ளம் மகிழவைத்து, கள்ளமில்லா சிரிப்பிலே நெஞ்சம் நெகிழவைக்கும் சிறார்க்கு விழா வாழ்த்துக்களை முகமலர்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவரையும் இறைவனின் பலிக்கு அன்பாய் அழைக்கின்றேன்.

‘குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று’ என்று குழந்தைகளை உயர்ந்த இடத்தில் பார்க்கும் சமூகம் நமது தமிழ்ச் சமூகமாகும். “இறையாட்சி இத்தகையோரதே” என இயேசு குழந்தை மனம் கொண்டோரே இறையாட்சியில் இடம் பெறமுடியும் என்கிறார். குழந்தைகள்தான் இறைவனின் நம்பிக்கை. உலகின் எதிர்கால சாட்சிகள். சாட்சிய வாழ்வு என்பது உண்மைக்கேற்ப வாழ்வதும், வாழத் தூண்டுவதும் ஆகும். வாழ்வின் கனவுகளோடும், இலக்கோடும் தாயின் கருவறையிலிருந்து வெளிவரும் குழந்தைகள் பாலகர்களாக, சிறார்களாக நடமாடும்போது அவர்களின் வாழ்வுநிலையும், உருவாக்கச் சக்தியும், கொடுக்கப்படும் வாய்ப்பும் அவர்களை உத்வேகத்தோடு முழுமையான வளர்ச்சியை நோக்கி பயணிக்க உதவ வேண்டும்.

குழந்தைகளிடம் இறைநம்பிக்கையும், அறநெறி வாழ்வும், சமூகச் சிந்தனையும் ஆழமாகப் பதிந்தால் வருங்கால சமூகத்திற்கும், திருஅவைக்கும் நல்ல சாட்சிகளாக அவர்கள் விளங்குவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இயேசு குழந்தைகளை அன்பு செய்தார். குழந்தைகளைப் போல எளிய உள்ளம் கொண்டவராக வாழ்ந்து, சீடர்களை உருவாக்கினார். நாமும் இத்தகைய மனநிலையில் வாழவும், குழந்தைகளின் எதிர்கால வாழ்வுக்கான அருளையும், ஆற்றலையும், ஆசியையும் வேண்டி பலியில் இணைவோம். இறையாசிப் பெறுவோம்.

## மன்னிப்பு மன்றாட்டு

1. இரக்கத்தின் இறைவா! எங்கள் கடமைகளை மறந்து, வாழ்வின் இலக்குகளை, இலட்சியங்களை மறந்து, இறைவனையும், இறையன்பையும் துறந்து உண்மை வழியில் நடக்க மறந்த நேரத்திற்காக இறைவா மன்னிப்பு வேண்டுகின்றோம்.
2. பரிவின் இறைவா! எங்கள் பெற்றோர், ஆசிரியர்கள், பெரியவர்கள் ஆகியோரின் அனுபவ வார்த்தைகளை உணராமல், அறநெறி வாழ்வை ஏற்றுக்கொள்ளாமல் வழிமாறிச் சென்று, அவர்களை மனம் வருந்த செய்த தருணங்களுக்காக இறைவா மன்னிப்பு வேண்டுகின்றோம்.
3. மன்னிப்பின் இறைவா! ஊடகம்தான் வாழ்வின் எல்லாம் என நினைத்து, எங்கள் திறமையை, வளர்ச்சியை, நிறைகளை, நல்ல விழுமியங்களை உருவாக்க மறந்த நேரத்திற்காக இறைவா மன்னிப்பு வேண்டுகின்றோம்.

## வாசக முன்னுரை

**முதல் வாசக முன்னுரை (லேவியர்: 13:1-2, 44-46)**

அன்றைய யூத சமூகத்தில் தொழுநோயுற்றவரின் அவல நிலையையும் நோயுற்றோர் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றியும் இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. தொழுநோயாளர் கடவுளின் சாபத்திற்கு உள்ளானவராகக் கருதப்பெற்று, வாழ்நாள் முழுவதும், தன்னைத் தீட்டுப்பட்டவராகச் சமூகத்திற்கு அறிவித்து வாழ வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார் எனக் கூறும் லேவியர் நூலிலிருந்து செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை (1கொரி: 10:31-11:1)**

இரண்டாம் வாசகமானது திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. என்ன செய்தாலும், சொன்னாலும் ஆண்டவரின் மாட்சிக்காகவும், பிறருக்கு இடையூராய் இல்லாது, ஒருவரை ஒருவர் உறுதிப்படுத்தவும். கிறிஸ்துவின் வாழ்வை பிரதிபலிக்கும் வாழ்வு வாழ அழைக்கும் இறைவார்த்தையை நமதாக்குவோம்.

## நம்பிக்கை மன்றாட்டு

1. ஞானத்தின் இறைவா!

எம் திருஅவையை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர்கள் ஆகிய இறைவாக்குப் பணியாளர்களை உம்மிடம் தருகின்றோம். மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து அறிந்து, திருஅவையைக் கிறிஸ்துவின் மனநிலைக்கு ஏற்ப வழிநடத்த தேவையான ஆற்றலை அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் ஊற்றே இறைவா!

எம் நாட்டுத் தலைவர்களை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம். உண்மையின் வழியில் அவர்கள் நடக்கவும், மக்கள் நலனில் அக்கறைக் கொண்டு செயல்படவும், மக்களிடையே பிரிவினைகளை, அச்சுறுத்தல்களை, ஏற்படுத்தாமல் மக்களின் வாழ்வு மேம்படவும், வளர்ச்சியை நோக்கி பயணப்படவும் வேண்டிய செயல் திட்டங்களை உருவாக்கி அவர்கள் வாழ்வில் அமைதி அருளவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கும் நிறைந்திருக்கும் இறைவா!

உம் அருள் வளங்களுக்காக நன்றி கூறுகிறோம். நாங்கள் தன்னலத்திற்காக இயற்கை வளங்களை சுரண்டுவதைத் தவிர்க்கவும், புவி வெப்பமயமாதலை உணர்ந்து, மரங்கள் நட்டு, அவற்றை பாதுகாக்கவும், இயற்கையை நல்முறையில் பயன்படுத்த வேண்டிய மனநிலையை வளர்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணையின் உருவே இறைவா!

உலகில் வாழும் அனைத்து குழந்தைகளுக்காகவும் குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக வேண்டுகிறோம். இன்றைய காலச் சூழலில் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் உடல், உளசீர்கேடுகளைத் தடுக்கவும், தட்டிக்கேட்கவும் அவர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு ஒளியாக, வழிகாட்டியாக, நாங்கள் செயல்பட வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.